*46*

# விவாகரத்தைக் குறித்து கேள்வி கேட்கப்படுதல்

## (19:1-12)

*மத்தேயு 19, 20 அதிகாரங்கள் இயேசுவின் பிரயாண ஊழியம் குறித்துக் காட்டப்படுகிற ஒரு பகுதி. அவரது பயணம் பெரேயாவுக்கு வடக்கே கலிலேயாவிலிருந்து தெற்கே யூதேயா வரைக்கும், தமது வழியை எருசலேமையும் அங்கு சிலுவையையும் நோக்கியதாக ஒரே உறுதியிட்ட நோக்கமாயிருந்தது. இந்த அதிகாரங்கள் இயேசுவின் பல்வேறு கூட்ட ஜனங்களிடத்தில் நடப்பித்த எதிர்ச் செயல்களை நினைவுகூரச் செய்கிறது. பொதுவாகக் குறிப்பிட்டால், அவர் கூட்டத்தின் மத்தியில் தாம் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கண்டார்.*

*அதிகாரம் 19 - மூன்று பெரிய பிரிவுகளாக பகுக்கப்படக்கூடும். முதல் பிரிவில், இயேசு விவாகரத்து குறித்து பரிசேயர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கிறார் (19:1-12). இரண்டாமதில், சிறு பிள்ளைகளை வரவேற்று அவர்களை ஆசீர்வதிக்கிறார் (19:13-15). கடைசி பிரிவு ஐசுவரியத்தைக் குறித்த பிரச்சனையையும் ஐசுவரிய வாலிபனுடனான இயேசுவின் உரையாடலைச் சுற்றியும் அமைந்தது (19:16-30).*

## பெரேயாவுக்கு இயேசுவின் பயணம் (19:1, 2)

**[1]இயேசு இந்த வசனங்களைச் சொல்லி முடித்த பின்பு, அவர் கலிலேயாவை விட்டு யோர்தானுக்கு அக்கரையான யூதேயாவின் எல்லைகளில் வந்தார்.**

**[2]திரளான ஜனங்கள் அவருக்குப் பின் சென்றார்கள்; அவ்விடத்தில் அவர்களை சொஸ்தமாக்கினார்.**

**வசனம் 1.** இந்த நிலைமாற்றச் சொற்றொடர் மத்தேயுவில் ஐந்து முறை வெளிப்படுத்தப்படுகிறது: **இயேசு இந்த வசனங்களைச் சொல்லி முடித்த பின்பு** (காண்க 7:28; 11:1; 13:53; 26:1). இங்கே, அது இயேசுவின் நான்காவது போதகப் பகுதியின் முடிவைக் குறிப்பிடுகிறது (அதிகாரம் 18). இச்சமயத்தில் இயேசு **கலிலேயாவை** கடைசியாக விட்டுப்போய் தம்முடைய உயிர்த்தெழுதலுக்குப் பின்பு அவர் குறித்திருந்த மலைக்குவரத்திட்டமிட்டுள்ள தமது சந்திப்பு வரை சுற்றித்திரிந்தார் (28:16, 17; யோவான் 21:1).

19:1-20:28 வரையிலான ஊழிய நிகழ்வுகளான "பெரேயா ஊழியத்தில்," தம்மை ஈடுபடுத்திக் கொள்ள இயேசு போனார்.[1] "பெரேயா," **யோர்தானுக்கு அக்கரையில்** (கிழக்கே) **யூதாவின் எல்லைக்கு** கொடுக்கப்பட்ட பெயர், அது

கிரேக்க வார்த்தையான *peran*, "அக்கரை," "மறுபக்கம்," அல்லது "அடுத்த பக்கம்" என்றெல்லாம் பொருள்படும். அந்தப் பகுதி யூதேயா வார்த்தையில் "யோர்தானுக்கு அக்கரை" என்று விவரிக்கப்படுகிறது (4:25; 19:1; மாற்கு 3:8; 10:1; யோவான் 1:28; 3:26; 10:40). "பெரேயா" எனும் வார்த்தை உண்மையில் புதிய ஏற்பாட்டில் இல்லை ஆனால் ஜோசிபஸ் என்பவரின் புத்தகங்களில் காணப்படுகிறது.[2] இந்த பிரதேசம் வடக்கே யார்மக் நதி தொடங்கி தெற்கே அர்னான் வரைக்கும் பரவியிருந்தது. அந்தப்பகுதி சிலவேளைகளில் யோர்தானுக்கு அப்புறத்தில் என்றும் அழைக்கப்பட்டது. இன்றைக்கு, இந்தப் பிரதேசத்தை ஆக்கிரமித்துள்ள (மேலும் வேறு சில பகுதிகளையும் உள்ளடக்கிய) நாடு யோர்தான் என்று சாதாரணமாக அறியப்பட்டுள்ளது.

பெரேயா யூதேயாவின் ஒரு பகுதியாக முறைப்படி அறிவிக்கப்படாததால், மத்தேயு குறிப்பிடுவது ஒரு கேள்வியை எழச் செய்கிறது. யோர்தான் நதி சாதாரணமாகவே இரண்டு பிரதேசங்களை நடுவாக பிரிக்கக் கூடிய அமைப்பில் உள்ளது, மாற்கு 10:1ல் ஒரு சுருக்கமான குறிப்பில் இயேசு "யோர்தானுக்கு அக்கரையிலுள்ள தேசத்தின் வழியாய் யூதேயாவின் எல்லைகளில் வந்தார்" என்று சொல்லப்படுகிறது, இப்படி இரண்டு இடங்களின் பெயர்களையும் பிரித்து பெயரிட்டுக் காட்டுகிறது.

யூதமத யாத்ரீகர்கள் கலிலேயாவிலிருந்து எருசலேமுக்குப் போக வடக்கில் யோர்தானைக் கடந்து, கிழக்குப் பக்கமாக பெரேயா வழியாகப் பயணித்து, பிறகு தெற்காக யூதேயாவுக்குள் மறுபடியும்கடந்து வந்து சேருவார்கள். இப்படிச் செய்வதினால், சமாரியா தேசத்துக்குள்ளே போகாமல் ஓரமாக வந்து சேருவர், சமாரியர்கள் அவர்களுடைய எதிரிகளாக கருதப்பட்டவர்கள். இந்த சம்பவத்தில் இயேசு அந்த வழியாக கடந்து போகவில்லை. மாறாக, லூக்கா சொன்னபடி, கலிலேயாவுக்கும் சமாரியாவுக்குமிடையிலே கடந்து போய் பிறகு பெரேயாவுக்குள் போனார் (லூக்கா 9:51-56; 13:22; 17:11).

இயேசு பெரேயாவைச் சுற்றிப் பயணித்து, பிறகு யூதேயாவுக்கு வந்தார். எரிகோ வழியாகப் போய் (20:29), தொடர்ந்து எருசலேமுக்குப் போனார் (20:17; 21:1, 10). இந்தப் பகுதியில் இயேசு தமது போதனையையும் அற்புதக் கிரியைகளையும் நிறைவு செய்திருந்தார், எதிர் வரும் தமது மரணத்துக்கு முன் நோக்கி ஏகத்தாழ தமது கோணத்தைத் திருப்பத் துவங்கியிருந்தார்.

**வசனம் 2. திரளான கூட்டம்** இயேசுவைச் சுற்றிச் சூழ்ந்தார்கள். அவர்தம் வழக்கம் போலவே, திரளான ஜனங்களைக் கண்டு மனதுருகி, அவ்விடத்தில் அவர்களைச் **சொஸ்தமாக்கினார்** (4:23, 24; 9:35; 14:35, 36; 15:30, 31).

## பரிசேயர்களின் கேள்வி (19:3-9)

**3 அப்பொழுது, பரிசேயர் அவரைச் சோதிக்க வேண்டுமென்று அவரிடத்தில் வந்து: புருஷனானவன் தன் மனைவியை எந்த முகாந்திரத்தினாலாகிலும் தள்ளிவிடுவது நியாயமா என்று கேட்டார்கள்.**

**4 அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும்,**

**5 இதனிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும்**

***விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும், நீங்கள் வாசிக்கவில்லையா?***

***[6]இப்படியிருக்கிற படியினால், அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால் தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக் கடவன் என்றார்.***

***[7]அதற்கு அவர்கள் அப்படியானால், தள்ளுதற் சீட்டைக் கொடுத்து, அவளைத் தள்ளிவிடலாமென்று மோசே ஏன் கட்டளையிட்டார் என்றார்கள்.***

***[8]அதற்கு அவர்: உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடலாமென்று உங்கள் இருதயக் கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார்; ஆதி முதலாய் அப்படியிருக்கவில்லை.***

***[9]ஆதலால், எவனாகிலும் தன் மனைவி வேசித்தனஞ் செய்ததினிமித்தமேயன்றி, அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால், அவன் விபச்சாரஞ் செய்கிறவனாயிருப்பான்; தள்ளி விடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபச்சாரஞ் செய்கிறவனாயிருப்பான் என்று உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார்.***

*விவாகரத்து மற்றும் மறுமணம் பற்றிய குழப்பமான பாடம் இந்த இடத்தில் இயேசுவுக்கு முன்பாக வைக்கப்படுகிறது. இந்த வசனப்பகுதி இன்று போலவே, அன்று கிறிஸ்துவின் நாட்களிலும் ஒரு வினயமான பிரச்சனையாக இருந்துள்ளதைத் தெரிவிக்கிறது. விவாகரத்து என்னும் பெயரில் புருஷர்கள் தங்கள் மனைவிகளை சாப்பாட்டை அடிபிடிக்க வைத்தாள் அல்லது பொது இடத்தில் தன்னை அவமதித்து விட்டாள் போன்ற அற்பக் காரணங்களுக்காக தள்ளி வைப்பது ஒரு சர்வ சாதாரண விஷயமாகி விட்டது.*

*இயேசு கொடுக்கும் பதிலைக் கூர்ந்து கவனித்தால், அவர் விவாகரத்தை பரிந்துரைக்கவில்லை, நிச்சயமாக அவர் அதைக் கட்டளையிடவுமில்லை என்பது தெளிவாகிறது. மாறாக, விவாகரத்தின் தீமைகளைச் சுட்டிக் காட்டி, அது எப்படி விபச்சாரத்துக்கும் தீட்டுப்படுதலுக்கும் உட்படுத்துகிறது என்பதைக் காட்டினார்.*

*தயக்கத்துடன் தேவன் அனுமதித்தது தெய்வீகக் குறிப்பாக மாற்றப்பட்டுள்ளது. மோசேயின் மூலம், தேவன் விவாகரத்தை (தள்ளிவிடுதலை) ஏற்றுக் கொண்டார், அனுமதித்தார்; ஆகிலும் இயேசு அது தேவனுடைய மூலாதாரமான எண்ணமாக ஒருபோதும் இருந்ததில்லை என்று போதித்தார். தள்ளி விடுதலை அவர் அவ்வளவு எளிமையான விஷயமாக விட்டு விடவில்லை; அவர் அதைக் கட்டுப்படுத்தினார். உண்மையில், அதை அமல்படுத்துவதை இன்னும் அதிகமாக கடுமையாக்கினார். விவாக பந்தத்தை ஆரம்பத்தைப் போன்ற பரிசுத்தமுள்ளதாக மீட்க இயேசு வகை தேடினார்.*

***வசனம் 3.*** *பெரேயா ஏரோது அந்திப்பாவினால் ஆட்சி செய்யப்பட்ட தேசம். ஜோசிப்பஸ் எழுதியுள்ளபடி பெரேயாவில்தான் யோவான் ஸ்னானன் சிறைவைக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். ஏரோதுவின் முறையற்ற விவாக உறவை தீர்க்கதரிசி கண்டனம் பண்ணி பேசியதன் விளைவாக இந்த அநீதி அவருக்கு நடந்தது. ஏரோதியாளை மனைவியாக்கிக்கொள்ள அவன்*

தனது நபாட்டியன் மனைவியை தள்ளி விட்டான், மறு மணம் செய்த ஏரோதியாள், அவனுடைய சகோதரன் முதலாம் ஏரோது பிலிப்புவின் மனைவி (காண்க 14:3, 4ன் விளக்கவுரை). இந்த வரலாற்றுப் பின்னணியின் கருத்து மிக அதிகமாய் - விவாதிக்கப்பட்ட ஒரு தலைப்பு **பரிசேயர்கள் இயேசுவிடம்** விவாகரத்து குறித்து கேள்வி கேட்க காரணமாயிருந்த ஆலோசனையும் இதுதான் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. ஒரு வேளை ஏரோது மற்றும் ஏரோதியாளைக் குறித்த முரண்பாட்டை முன் வைத்து அவரைக் குழப்பி, யோவான் பட்ட பாடுகளை இயேசுவும் அடைய வேண்டுமென நம்பி அப்படிச் செய்திருக்கலாம்.

பரிசேயர்கள், **புருஷனானவன் எந்த முகாந்தரத்தினாலாகிலும் தன் மனைவியைத் தள்ளி விடுவது நியாயமா** என்று கேட்டார்கள். தள்ளி விடுதல் என்பது யூதமார்க்கத்தில் ஆண்களுக்கான சிறப்புரிமையாகக் கருதப்பட்டது.[3] சில சூழ்நிலைகளில், ஒரு பெண் தன்னை தன்னுடைய புருஷன் தள்ளிவிட ஏதுவாக விசாரணைக் கூடங்களையே சம்மதிக்க வைக்க முடிந்தது.[4] ஏரோதுவின் குடும்ப வரிசையில் ஒரு சில ஸ்திரீகள் தங்களுடைய புருஷர்களை விவாகரத்து செய்தனர், ஆகிலும் இதைப் பெரும்பாலான யூதர்கள் ஒரு மூர்க்கத்தனமான செயலாகவே எண்ணினர். அப்படிப்பட்ட ஒரு சம்பவத்தைக் குறித்து, ஜோசிபஸ் எழுதினார்,

> சலோமி (பெரிய ஏரோதுவின் சகோதரி) காஸ்டோபராவுடன் சண்டையிட நேர்ந்த பொழுது, அவள் தள்ளுதல் சீட்டை அனுப்பி வைத்தாள், அவனுடனான தனது விவாகப்பந்தத்தை முறித்துக் கொண்டாள், இது யுதமத முறைமையாக இருக்கவில்லையெனினும் அப்படி நடந்தது; நம்மைப் பொறுத்தமட்டில் ஒரு புருஷன் அப்படிச் செய்வது முறையானது; ஆனால் ஒரு மனைவி, தன் புருஷனை விட்டுப் பிரிந்துபோனால், தனது புருஷன் தன்னைத் தள்ளிவிட்டாலொழிய அவள் வேறொருவனை அவள் விவாகம் செய்துகொள்ளக்கூடாது.[5]

பின்னதாக, அவர் எழுதினார், "ஏரோதியாள் நமது நாட்டின் சட்டத்தைக் கையில் எடுத்துக்கொண்டு அதைக்குலைத்துப் போட்டாள், தனது புருஷன் உயிரோடு இருக்கும்போதே அவனிடத்திலிருந்து அவள் தன்னை விவாகரத்து செய்து கொண்டு, ஏரோது (அந்திப்பாவு)க்கு மணமுடிக்கப்பட்டாள், அவன் அவளுடைய தகப்பனின் பகுதியில் அவள் புருஷனின் சகோதரன்."[6] இந்த உயர்குடி ஸ்திரீ கிரேக்க - ரோமக் கலாச்சாரத்தின் செல்வாக்கால் மேற்கொள்ளப்பட்டு, ஸ்திரீகளும் தங்கள் புருஷர்களை தள்ளி விடலாம் என்கிற காரியம் அதிக ஏற்புடையதாகக் காட்டப்பட்டது (காண்க 1 கொரிந்தியர் 7:12, 13).

மத்தேயு புத்தகம் பரிசேயர்களின் கேள்வியான "எந்த முகாந்தரத்தினாலாகிலும்" எனும் வாக்கியத்தை தகுதிபடுத்தியது (காண்க மாற்கு 10:2). அவருடைய யூத வாசகர்கள் எருசலேமில் நடந்த சமகால விவாதத்தை நினைத்துப் பார்க்க ஏதுவாக்கியது. பரிசேயர்கள் தள்ளுதற் சீட்டுக் கொடுப்பது அனுமதிக்க*ப்பட்டதா* என்று கேட்கவில்லை, ஏனெனில் அது எல்லா யூதனும் சரியென்றே ஏற்றுக் கொண்டிருந்தான். மாறாக, தள்ளிவிடுதலுக்கான *முகாந்திரத்தைக்* கேட்டார்கள், "எந்த முகாந்திரத்தினாலாகிலும்" என்பது

“புருஷன் தனது தள்ளிவிடுதலுக்கு ஏதாவது முகாந்தரத்தைப் குறிப்பிட்டுச் சொல்லக் கூடுமா” என்று கேட்பதாகப் பொருள். ஜோசிப்பஸ் ஒரு புருஷன் தனது மனைவிக்கு தள்ளுதல் சீட்டை “எந்த முகாந்தரமாயிருந்தாலும் கொடுக்கலாம்” என்றும் தொடர்ந்து புருஷர்களிடத்தில் “அப்படிப்பட்ட அநேக சம்பவங்கள்” நடந்துள்ளது என்றும் சொன்னார்.[7]

சில யூத ரபீமார்கள் விவாகரத்துக் (தள்ளிவிடுதலைக்) குறித்து உபாகமம் 24:1-4ல் மோசே போதித்தவைகளை தவறான அர்த்தம் செய்திருந்ததின் அடிப்படையில் எடுத்துக் கொண்டனர். இயேசுவின் நாட்களில் விவாகரத்துக்கான முறையான முகாந்தரம் குறித்து இரண்டு விதக் கருத்துக்கள் நிலவியது. இரண்டு கருத்துக்களுமே உபாகமம் 24:1-4ஐ அடிப்படையாக கொண்ட போதனைகள் (5:31 ற்கான விளக்கவுரையைக் காண்க). அவர்களின் மிகவும் பூர்வகால நம்பிக்கையுடைய ஸாமாய் பிரிவினர், மோசே பேசின “நாகரீகமற்ற” காரியம் விபச்சாரம் என்று நம்பினர். அவர் எப்படி தனது கருத்தை நியாயப்பிரமாணத்துக்கு நிகராக்கினார் என்று நமக்குத் தெரியவில்லை, அந்தப் பாவத்துக்குத் தண்டனை மரணமேயன்றி, தள்ளுதற்சீட்டைக் கொடுப்பதல்ல என்றனர் (லேவியராகமம் 20:10-14; உபாகமம் 22:22). இரண்டு பிரிவினரிலும் அதிக சுதந்திரம் எடுத்துக் கொண்டு போதித்த ஹில்லல், புருஷனை பிரியப்படுத்தாத எந்த காரியமும் “நாகரீகமற்றதே” என்று போதித்தனர்.[8]

இந்த இறையியல் பின்னணியுடன், இந்த பரிசேயர்கள் இயேசுவை **சோதிக்கும்படி** அவரிடத்தில் வந்தார்கள். இங்கு குறிப்பிடப்படும் “சோதிக்கும்படி” என்பது சோதித்துப் பார்க்கும்படி என்று மொழிபெயர்க்கலாம் (16:1ன் விளக்கவுரையைக் காண்க). சத்தியத்தை தீர்மானிப்பது அவர்களின் நோக்கமல்ல, மாறாக இயேசு ஒரு இறையியல் குழப்பவாதி என்று குற்றம் பிறக்க அவர்கள் வகை தேடினார்கள். அவருடைய பதிலைக் கொண்டே கூட்டத்தை அவருக்கு எதிராக திருப்பி விட ஒருவேளை அவர்கள் முயற்சித்திருக்கலாம்.

அவர்களுக்குப் பதில் கொடுக்கும்போது, அந்த இருபிரிவினரின் ரபீமார்களின் கருத்துக்குச் சாயாமல் பதில் கொடுத்த இயேசு தம்மை கேள்வி கேட்டவர்களை ஆச்சரியப்பட வைத்திருக்க வேண்டும். உபாகமத்தில் மோசே குறிப்பிட்ட போதனையை அவர் பார்க்கக் கூட இல்லை. மாறாக, இயேசு துவக்கத்துக்குப் போய் தேவனுடைய மூலாதாரமான திருமணத் திட்டத்தின் மீது கவனம் செலுத்தினார் (ஆதியாகமம் 1:27; 2:24).

**வசனம் 4.** இயேசு தமது பதிலை ஒரு கேள்வியுடன் துவங்கி ... **நீங்கள் வாசிக்கவில்லையா** என்று கேட்டார் (காண்க 12:3; 21:16, 42; 22:31). தேவன் இருவேறு பாலினங்களான, **ஆணும் பெண்ணுமாக** உண்டாக்கி, இனப்பெருக்கத்துக்காகவும் அவர்களை தோழமைக்காகவும் உண்டு பண்ணினார். அவர் தம்முடன் வாதிடுபவர்களை சிருஷ்டிப்புக்கு கொண்டு செல்வதன் மூலம், உச்சக்கட்ட பலமான தர்க்கத்தைச் செய்தார். ரபீமார்கள் “அதிக உண்மையானது, கனமானது” என்றனர்.[9] தேவனுடைய மூலாதாரக் காரியங்கள் உண்மையானதும் கனமானதுமான மிகவும் உயர்வான அதிகாரத்தை வெளிப்படுத்துவதுமாகும்.

கிரேக்க மேற்கோளிட்டு காட்டுகிறபடி ஆதியாகமம் 1:27 லிருந்து செப்துவஜிந்த் குறிப்பிடுவது: தேவன் தமது சாயாலாக மனுஷனைச்

*சிருஷ்டித்தார்; அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களை சிருஷ்டித்தார்* (வலியுறுத்தல் என்னுடையது). ஆதியாகமம் 5:2ல் *அவர்களை ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்து* அவர்களை ஆசீர்வதித்து, அவர்களை சிருஷ்டித்த நாளிலே அவர்களுக்கு மனுஷர் என்று பேரிட்டார் (வலியுறுத்தல் என்னுடையது).

தேவன் ஆணையும் பெண்ணையும் ஒருவருக்கொருவர் பாராட்டிக் கொள்ளவும் முழுமை பெற்றவர்களாகவும் ஆக்க உண்டாக்கினார் (ஆதியாகமம் 2:18, 24). இந்த மூலாதார வடிவமைப்பு அதற்குப் பின்பு வரும் அனைத்து எதிர்கால பாலுறவு ஒற்றுமைக்கு முன்மாதிரியானது. அதனுடைய முக்கியமான இயல்பினால், பலதார மணங்களைத் தவிர்க்கிறது,[10] ஒரே சமயத்தைச் சார்ந்த பலதார மணங்களையும், தள்ளுதற் சீட்டைக் கொடுத்தல் மற்றும் மறுமணம் புரிதலையும் இல்லாமற் செய்கிறது. ஜான் கிரைசோஸ்டம், "மனிதன் தன் ஒரு மனைவியைத் தள்ளி விட்டு, மற்றொருத்தியை, பிறகு மற்றொருத்தியை விவாகம் செய்யலாம் என்பது அவருடைய சித்தமாக இருந்திருந்தால், அவர் ஒருவனை உண்டாக்கின போதே, அநேக பெண்களை உண்டாக்கியிருக்க வேண்டும்" என்று எழுதினார்.[11] "தேவனுடைய எண்ணத்தின் உட்கருத்து ஓரினச் சேர்க்கையையும் தவிர்க்கிறது" (ரோமர் 1:26, 27). ஆணோடு ஆண் பெண்ணோடு பெண் என்று அவர் திட்டமிட்டிருந்திருப்பாரேயானால், ஆதாமுக்கு இணையாக இன்னொரு ஆணையும், ஏவாளுக்கு இன்னொரு பெண்ணையும் உண்டாக்கியிருப்பார். தேவனுடைய நோக்கத்துடன் மனிதர்கள் விளையாடும் போது, அதன் விளைவு பேராபத்தில் போய் முடியும்.

**வசனம் 5.** அடுத்ததாக ஆதியாகமம் 2:24ஐ இயேசு மேற்கோள் காட்டினார்: **இதனிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்** புருஷன் மனைவிக்கு இடையேயான உறவு மற்றெல்லா உறவுகளையும் முக்கியத்துவமற்றதாக்கி விடுகிறது. ஒரு ஆணுக்கும் அவனுடைய பெற்றோருக்குமிடையேயான உறவுமுறையைக் கடந்த கணவன் மனைவி உறவு "விட்டுப் போய்" "இசைந்திருத்தல்" கொள்கையை உட்படுத்தியது (காண்க KJV). புருஷன் தன் பெற்றோர்களை "விட்டு" அவன் தன் மனைவியோடே "இசைந்திருக்க" வேண்டும் அல்லது "இணையுண்டிருக்க" வேண்டும். "விட்டு" என்ற கிரேக்க வார்த்தை (*kataleipō*) யின் பொருள் "கை விடுதல்." மனிதன் தன் பெற்றோர்களை முற்றிலும் கைவிடாதவனானபடியால் (15:3-6), தெளிவான பிரிந்திருத்தல் இடம் பெற வேண்டும். "இசைந்திருத்தல்" அல்லது "இணையுண்டிருக்க" வேண்டும் (*kollaō*) என்பதன் மூலப் பொருள் "பசை" அல்லது "சிமெண்டால்" பலமாக ஒட்டுவதைக் குறிக்கிறது. விவாகத்தில், ஒரு கணவனும் மனைவியும் "ஒரே மாம்சமாகிறார்கள்" (எபேசியர் 5:28-31). இந்த ஒருமை அவர்களுடைய பாலுறவில் மாமிசப் பிரகாரமாக வெளிப்படுத்தப்படுகிறது (காண்க 1 கொரிந்தியர் 6:16; 7:2-4).

**வசனம் 6.** சிருஷ்டிப்பை அடிப்படையாகக் கொண்டு, இயேசு இந்தக் கட்டளையைக் கொடுத்தார்: **தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக் கடவன்.** "இணைத்ததை" எனும் கிரேக்க வார்த்தைக்கு (*suzeugnumi*) நேரடிப் பொருள் "ஒன்றாக பிணைக்கப்படுதல்." தேவன் முதல் தம்பதியை ஒன்றாக பிணைத்தார், திருமணச் சடங்கை துவக்கி வைத்ததன் மூலம் அப்படிச் செய்தார்.

*திருமணம் ஒரு தெய்வீக நிறுவனம். தேவனுடைய மூலாதாரத்திட்டமே ஒரு ஆணுக்கு ஒரு பெண் என்பது வாழ்நாள் முழுவதற்குமான கட்டளை (ஆதியாகமம் 2:21-25). இந்த ஒற்றுமை நித்தியமானது என்ற பொருளில் தேவன் குறிப்பிட்டார். நம்முடைய நாட்களில் உள்ளது போலவே திருமணம் குறித்த இந்த உயர்ந்த கண்ணோட்டம் இயேசுவின் நாட்களிலும் புரட்சிகரமானதாக இருந்தது.* R. T. France *என்பவர், "விவாகரத்து என்பதை* தேவனுடைய *கிரியையை* மனிதன் *இல்லாததாக்குவது என்பது, இந்த விவகாரம் முழுவதையுமே ஒரு புதிய வித்தியாசமான கோணத்தில் இடுகிறது" என்பதாக விளக்கினார்.*[12]

*தேவன் ஒருவரே முதல் தம்பதியரை* ஒரே மாம்சமாக *இருக்கும்படி விவாகத்தில் இணைத்தபடியால், அவர் ஒருவருக்கே, எந்த அடிப்படையில் இந்த இணைப்பு முறிக்கப்படலாம் என்று அறிவிக்க நியாயமான அதிகாரம் உள்ளது. அவர் அளித்தத் திட்டத்தின்படி, திருமண பந்தம் மரணத்தில் மட்டுமே முடிவுறுகிறது, அது விடப்பட்டிருக்கும் துணைவரை மறுவிவாகம் செய்ய விடுதலையாக்குகிறது (ரோமர் 7:1-3; 1 கொரிந்தியர் 7:39). தம்பதிகளில் ஒருவரது உண்மை நிலைக்குப் புறம்பான பாலுறவு காரணமாயிருப்பின், திருமணம் முறிவதுடன் தவறு செய்த மற்றொருவர் மறுமணம் செய்ய விடுதலை பெற்று இருக்கிறார்.*

***வசனம் 7.*** *பிறகு பரிசேயர்கள் கேட்டார்கள்,* ***அப்படியானால், தள்ளுதல் சீட்டைக் கொடுத்து, அவளைத் தள்ளிவிடலாமென்று மோசே ஏன் கட்டளையிட்டார் என்றார்கள்?*** *இந்த உரையாடலின் வரிசைகிரமம் மாற்குப் புத்தகத்தில் மாறியிருக்கிறது. இயேசு கேட்டார், "மோசே உங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறது என்ன?" (மாற்கு 10:3, 4), அதற்கு பரிசேயர்கள் பிரதியுத்தரமாக, "தள்ளுதற்சீட்டை எழுதிக் கொடுத்து அவளைத் தள்ளி விடலாமென்று மோசே உத்தரவு கொடுத்திருக்கிறார்" என்றார்கள். விவாகம் குறித்த பிரச்சனைக்கு உபாகமம் 24:1-4ஐ யூதர்களின் விவாதத்திற்கான அடிப்படையாகக் கொண்டனர். பரிசேயர்கள் தர்க்கித்து ஒரு மனிதன் தள்ளுதற் சீட்டை எழுதி தனது மனைவியை விவாகரத்து செய்து விடலாம் என்று மோசே கட்டளையிட்டிருப்பதாகக் கூறினர் (காண்க 5:31ன் விளக்கவுரை).*

***வசனம் 8.*** *இயேசு திருமண பந்தத்தின் உறுதித் தன்மையை நியாயப்படுத்தி அவர்களிடம் பேசினார். தேவனுடைய சிருஷ்டிப்புக்கு அவர்கள் கவனத்தை கொண்டு சென்றார் (ஆதியாகமம் 1; 2). ஜனங்கள் மோசேயின் போதனையைப் பயன்படுத்திப் பேசி (உபாகமம் 24:1-4) அவர்களின் திருமண பந்தத்தை உடைப்பதை நியாயப்படுத்தினர். அவருடைய இந்தப் போதனைகள், உண்மையில், திருமணத்தின் பரிசுத்தத்தைக் காக்கக் கூடிய வகையில் திட்டமிடப்பட்டது.*[13] *இந்த பரிசேயர்கள் குறிப்பிடுவது போல மோசேயின் போதனைகள் தள்ளிவிடுதலை கட்டளையிடவில்லை (19:7). உங்கள்* ***மனைவிகளைத் தள்ளிவிடலாமென்று மோசே உங்களுக்கு இடங்கொடுத்தான்*** *என்று சொல்லிய போது இயேசு அந்த சத்தியத்தை அடிக்கோடிட்டுக் காட்டினார் (வலியுறுத்தல் என்னுடையது). மோசே விவாகரத்தை ஊக்கப்படுத்த எழுதிக் கொண்டிருக்க வில்லை, ஆனால் கட்டுப்படுத்த முடியாமல் போன ஒரு சூழ்நிலையை ஒழுங்குபடுத்தவே எழுதினார். இந்தப் பரிசேயர்களுக்கு கர்த்தருடைய பதிலானது மோசேயின்*

நோக்கத்தை உறுதிப்படுத்துகிறது.

மோசே ஏன் இந்த சலுகையை அளித்தார்? இயேசு, **அது அவர்களுடைய இருதயக் கடினத்தினிமித்தம்** என்று சொன்னார். தேவனுடைய சித்தத்தினால் விவாகரத்து விளையவில்லை, ஆனால் மனிதனுடைய மாறுபாடான தன்மையினாலேயே நேர்ந்தது. தேவனுடைய மக்கள் (**துவக்கத்தில் இருந்தே**) அவருடைய பிரமாணத்தின் முதன்மையான நோக்கத்திலிருந்து வழுவிச் சென்றிருந்தனர். ஆகையால், அவர் தமது கிருபையால், நடப்பு முறையில் மேற்கொண்டு தவறுகள் நேரிடாதபடிக்கு வீடு மற்றும் குடும்பத்தைக் குறித்த ஒழுங்கு முறைகளைக் கொடுக்க மோசேயை அனுமதித்தார். தீர்க்கதரிசியாகிய மல்கியா "தள்ளிவிடுதலை தேவன் வெறுக்கிறார்" என்று எழுதினார் (மல்கியா 2:14-16). புதிய ஏற்பாடு இந்த விஷயத்தில் அவர் தமது மனதை மாற்றிக் கொண்டதாக ஒரு இடத்தில் கூட குறிப்பிடுவதில்லை. உண்மையில் மத்தேயு 19:3-9 தேவனுடைய துவக்க நோக்கத்தின் திருமண அமைப்பை மீட்டமைக்க இயேசுவின் முயற்சியை முன்வைக்கிறது.

**வசனம் 9.** இயேசு முடிவுரையாக, **எவனாகிலும் தன் மனைவி வேசித்தனஞ் செய்ததினிமித்தமேயன்றி, அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால், அவன் விபச்சாரஞ் செய்கிறவனாயிருப்பான் ... என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.** மாற்கு 10:10 சீஷர்களின் கேள்விக்கு ஒரு வீட்டில் பதிலளித்தார் என்று சொல்லுகிறது. இயேசுவால் அமைதியாக்கப்பட்ட பரிசேயர்கள், இந்த வார்த்தைகளை இயேசு பேசுவதற்கு முன்பே வெளியேறியிருக்கலாம். இந்த அதிகாரத்தில், வசனம் 10 வரை சீஷர்களைப் பற்றி குறிப்பிடப்படுவதில்லை.

தள்ளி விடுதலையும் மற்றும் மறுமணத்தையும் குறித்த கர்த்தருடைய போதனை அவர் மலைப்பிரசங்கத்தில் சொன்னவைகளோடு இங்கே ஒத்துப்போகிறது: "தன் மனைவியைத் தள்ளிவிடுகிற எவனும் வேசித்தன முகாந்தரத்தினாலேயன்றி தள்ளிவிட்டால், அவளை *விபச்சாரஞ் செய்யப் பண்ணுகிறவனாயிருப்பான்*; அப்படித் தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபச்சாரம் செய்கிறவனாயிருப்பான்" என்றார் (5:32; வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது).

பரிசேயர்கள் இயேசுவினிடத்தில் "எந்த முகாந்தரத்தினாலாகிலும்" ஒருவன் தன் மனைவியைத் தள்ளிவிடலாமா என்று கேட்டிருந்தனர் (19:3). அதற்கு அவருடைய பதில் தேவனுடைய சிருஷ்டிப்பின் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது, எனவே பதில் "இல்லை!" என்பது தான். பின்னதாக, இயேசு தமது சீஷர்களிடத்தில் இந்தப் பொதுவான விதிக்கு "விபச்சாரம்தான்" விதி விலக்கு என்று சொன்னார்.[14] "விபச்சாரம்" என்பது கிரேக்க மொழியிலிருந்து சிலவேளைகளில் "வேசித்தனம்" என்றும் மொழிபெயர்க்கப்பட்டது (KJV) மற்றும் "திருமண காரியத்தில் உண்மையின்மை" (NIV), அதோடு *porneia,* எல்லாவித சட்ட விரோத பாலுறவுகளும் அடங்கும் "விபச்சாரம்" எனும் பதத்தைக் காட்டிலும் விசாலமான பொருளை (*moicheia*), உடையது. அதாவது திருமணம் செய்து கொண்ட இருவரில் ஒருவர் திருமண பந்தத்திற்கு அப்பால் கொள்ளும் அதிகப்படியான உடலுறவு.[15]

விதிவிலக்காகக் கூறப்பட்டதன் அடிப்படையில் மனிதன் தன்னுடைய அவிசுவாசமுள்ள மனைவியை தள்ளிவிடலாமென்றிருந்தாலும், அப்படிச்

*செய்யவேண்டுமென்று அவனுக்கு (ரபீமார்களின் பாரம்பரியம் போதிப்பது போல*[16]*) கட்டளையிடப்படவில்லை. ஒருவேளை உண்மையான மனந்திரும்புதலினாலும் மன்னிப்பதனாலும் திருமண பந்தத்தை மீட்டமைக்க வழிவகுக்கலாம்.*

## *சீஷர்களின் பதில்கள் (19:10-12)*

***[10]அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: மனைவியைப் பற்றிப் புருஷனுடைய காரியம் இப்படியிருந்தால், விவாகம் பண்ணுகிறது நல்லதல்ல என்றார்கள்.***

***[11]அதற்கு அவர்: வரம் பெற்றவர்களே தவிர மற்றவர்கள் இந்த வசனத்தை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். தாயின் வயிற்றிலிருந்து அண்ணகர்களாய்ப் பிறந்தவர்களும் உண்டு; மனுஷர்களால் அண்ணகர்களாக்கப்பட்டவர்களும் உண்டு;***

***[12]பரலோக ராஜ்யத்தினிமித்தம் தங்களை அண்ணகர்களாக்கிக் கொண்டவர்களும் உண்டு; இதை ஏற்றுக் கொள்ள வல்லவன் ஏற்றுக் கொள்ளக் கடவன் என்றார்.***

***வசனம் 10.*** *பரிசேயர்களுடனான இயேசுவின் திறந்த வெளி விவாதத்திலிருந்து காட்சி ஒரு வீட்டிலே அவருடைய **சீஷர்களுடன்** துவங்குகிறது (மாற்கு 10:10). இப்பொழுதும் அதே தலைப்பு பரிசீலிக்கப்படுகிறது. சீஷர்கள் தங்களுடைய புரிந்து கொள்ளுதலின்படி தம்மைப் பின்பற்றி வருவோர் விவாகரத்து விஷயத்தில் தெரிவுசெய்து செயல்படுவதல்ல - ஒரே விதிவிலக்கு வேசித்தனம் அல்லது பாலுறவு ஒழுங்கீனம், திருமணம் செய்து கொண்ட இருவரில் எந்த ஒருவரிடத்தில் இருந்தாலும் தள்ளிவிடலாம் என்பதாக இயேசு கூறினார் என்பதை புரிந்து கொண்டார்கள். இதிலிருந்த உண்மையைப் புரிந்து கொள்வதில் இருக்கிற கடினத்தால் அவர்கள், **மனைவியைப் பற்றிப் புருஷனுடைய காரியம் இப்படியிருந்தால், விவாகம் பண்ணுகிறது நல்லதல்ல என்றார்கள்.** அவர்களின் புரிந்து கொள்ளல் இதுதான்: "திருமணம் கெட்டதாக மாறும்போது வேசித்தனம் அல்லது மரணம் நேரிட்டாலொழிய அதிலிருந்து விடுபட முடியாது என்றால், திருமணம் செய்து கொள்ளாமலேயே இருந்து விடுவது நல்லது."*

*இதற்கு முன், சீஷர்கள் விவாகரத்துக்கான அடிப்படையாக ஹில்லலின் சுயாதீன கண்ணோட்டத்தை ஏற்றுக் கொண்டவர்களாக இருந்துள்ளனர். எந்தக் காரணமாயிருந்தாலும் விவாகரத்து கொடுக்கலாம் என்று அவர்களுடைய கண்ணோட்டம் இருந்ததோடல்லாமல், மோசமான மனைவியை தள்ளிவிட ஒருவன் கடமைப் பட்டிருக்கிறான் என்ற எண்ணத்தையும் சில யூதர்கள் கொண்டிருந்தனர்.*[17]

***வசனம் 11.*** *இயேசு தமது சீஷர்களிடம்: **வரம் பெற்றவர்களே தவிர மற்றவர்கள் இந்த வசனத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்,** என்றார். அவருடைய வார்த்தைகள் குறைந்த பட்சம் இரண்டு வித்தியாசப்பட்ட வழிகளில் புரிந்து கொள்ளப்பட்டிருந்தன. ஒரு கண்ணோட்டம் "இந்த வாக்கியத்தை" அல்லது "இந்த வார்த்தை" (logos) என்பது இயேசு இதற்கு*

முன்பு போதித்த விவாகத்தைப் பற்றிய (19:3-9) வைகளைக் குறிப்பிடுகிறது என்கின்றனர். புதிய யூத வேதாகமத்தில் இந்த விளக்கத்தை அது தெளிவாக்குகிறது: "அவர் மறுமொழியாக, 'நான் சொன்னவைகளை எல்லோரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஆகிலும் யாருக்கு ஏற்றுக்கொள்ளும்படி அளிக்கப்பட்டிருக்கிறதோ அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள்.' " இந்த இடத்தில், திருமணம் என்பது தேவனுடைய வரமாக பார்க்கப்படுகிறது. இதை "ஏற்றுக்கொள்ளாதவர்கள்" பிரம்மச்சாரியத்தை மேற்கொண்டவர்களாகவே இருப்பவர்கள்தான் (19:12).

இன்னொரு கண்ணோட்டத்தில் "இந்த வாக்கியத்தை" (வசனத்தை) என்பது "விவாகம் பண்ணுகிறது நல்லதல்ல" என்ற சீஷர்களின் வார்த்தைகளை குறிப்பிடுவதாகக் கூறுகின்றனர் (19:10). இங்கே, சீஷர்களின் அடிப்படை முடிவை இயேசு ஏற்றுக்கொண்டு - அதாவது, சிலர் திருமணம் பண்ணிக் கொள்ளாமலேயே இருப்பது நலம் என்பதை ஏற்றுக் கொண்டார். எப்படியிருப்பினும், எல்லாருமே பிரம்மச்சாரிய வாழ்வை வாழ்ந்து விட முடியாது என்பதை அவர் அறிந்திருந்தார் (காண்க 1 கொரிந்தியர் 7:2). பவுல் திருமணத்தைக் குறித்த உறுதித்தன்மை "தேவனிடத்திலிருந்து வந்த வரம்" என்ற வகையில் காணுகிறார் (1 கொரிந்தியர் 7:7).

***வசனம் 12.*** ஜனங்கள் ஏன் திருமணம் செய்து கொள்வதில்லை என்பதற்கு மூன்று காரணங்களை இயேசு கொடுக்கிறார். முதலாவதும் இரண்டாவதும் சரீரத்தின் தன்மையைக் குறிப்பிடுகிறது. அவை மூன்றாவது காரணத்துக்கு, ஆவிக்குரிய தெரிவுக்கு வழிகாட்டுகிறது. கடைசி காரணமே வசனத்தின் ஒருமுகப்படுத்தலுக்குரியதாகிறது.

முதலாவதாக, கர்த்தர் சொன்னார், **தாயின் வயிற்றிலிருந்தே அண்ணகர்களாய் பிறந்தவர்களும் உண்டு.** "பிறப்பின் பாதிப்பு சில மனுஷர்களை அண்ணகர்களாக்கியுள்ளது." ரபீமார்களின் இலக்கியம் அவர்களை "இயல்பில் அண்ணகர்கள்" என்று குறிப்பிடுகிறது.[18] மணமாகாதோர், தங்கள் பாலுறவு ஆசைகளைத் தீர்த்துக் கொள்ள அவர்களுக்கு ஒரு கடினமான சவால்களாக இருப்பதில்லை.

இரண்டாவதாக, இயேசு சொன்னார், **மனுஷர்களால் அண்ணகர்களாக்கப்பட்டவர்களும் உண்டு,** "மனுஷனால் அண்ணகராகப்படுதல்" எனும் சொற்கள் கூட ரபீமார்களின் பொதுவான வெளிப்படுத்துதல்களாய் இருந்தன.[19] அது இனப்பெருக்க ஆற்றலை அழித்து விட்ட மனுஷர்களைக் குறிப்பிட்டது. இந்த செயல்கள் யூதர்களால் ஏற்புடையதாக இருக்கவில்லை,[20] ஏனெனில் அப்படிப்பட்ட மனுஷர்கள் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது என்று நியாயப்பிரமாணம் அவர்களை விலக்கி வைத்தது (உபாகமம் 23:1), அல்லது பலி பீடத்தண்டையில் அவர்கள் ஊழியம் செய்யலாகாது (லேவியராகமம் 21:20, 21). இருப்பினும் இனப்பெருக்க ஆற்றலை அழித்தல் என்பது புறஜாதிமக்களிடையே பொதுவாக இருந்த ஒரு பழக்கம். பழங்கால கிழக்கத்திய நாடுகளில், இப்பழக்கம் கிரிமினல் குற்றாளிகளுக்குத் தண்டனையாக கொடுக்கப்பட்டது.[21] கூடுதலாக, சில அஞ்ஞான ஆசாரியர்கள் மத நோக்கத்தினிமித்தம் இனப்பெருக்க ஆற்றல்கள் அழிக்கப்பட்டனர்.[22] இராஜாவின் அரண்மனை அந்தப்புரத்துக்கு பொறுப்புள்ளவர்கள் தனக்குக் கீழ்ப்பணியாற்றும் பெண்களால் எந்த

*பிள்ளைகளுக்கும் தான் தகப்பனாகாதபடிக்கு தடுக்கும் பொருட்டு அண்ணகராக்கப்பட்டனர் (காண்க எஸ்தர் 2:14). சில ஆட்சியாளர்கள் அண்ணகர்களைத் தங்களுக்கு உயர் அதிகாரிகளாக அமர்த்துவதைத் தெரிந்து கொண்டனர், ஏனெனில் இந்த மனுஷர்கள் தான் அமைதியானவர்களும் அதிகக் கடமைப் பற்றுள்ளவர்களாயுமிருப்பார்கள் என்று அவர்கள் நினைத்தார்கள்.*[23]

*அப்படிப்பட்ட ராஜரீக அதிகாரிகளுக்கு முன்மாதிரிகளை பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் காணலாம். தானியேலும் அவருடைய மூன்று நண்பர்களும் பாபிலோனுக்கு கொண்டு போகப்பட்ட போது அண்ணகர்களாக்கப்பட்டனர். "இராஜ குடும்பத்தைச் சேர்ந்த சில குமாரர்கள் பாபிலோன்" அரண்மனையில் வேலைக்காரர்களாக (அண்ணகர்களாக) அமர்த்தப்படுவார்கள் என்ற தீர்க்கதரிசன வாக்கியமும் இதற்கு ஒத்திருக்கிறது (2 இராஜாக்கள் 20:18; ஏசாயா 39:7;* KJV*). உண்மை என்னவெனில், "இந்த நால்வரும் [ராஜாவின்] பிரதானிகளின் தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்டிருந்தார்கள்" (தானியேல் 1:3, 4;* KJV*).*[24] *புதிய ஏற்பாட்டில் எத்தியோப்பிய மந்திரி (ஒரு அண்ணகன்), நன்கு அறியப்பட்டவன், ராணியின் பொக்கிஷத்திற்கு அதிகாரியாக நம்பிக்கைக்குரியவனாய் அமர்த்தப்பட்டவன் பிலிப்புவினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டான் (நடபடிகள் 8:27).*

*மூன்றாவதாகக் கர்த்தர் சொன்னார்,* ***பரலோகராஜ்யத்தினிமித்தம் தங்களை அண்ணகர்களாக்கிக் கொண்டவர்களும் உண்டு.*** *இந்தக் கடைசி பிரிவினரை உருவகமாகப் புரிந்து கொள்ள வேண்டும்.*[25] *இந்த ஆண்கள் விருப்பப்பட்டிருந்தால் மணமாகி, பிள்ளைகளைப் பெற்றிருக்கக் கூடும். எப்படியிருப்பினும், அவர்கள், பவுலைப் போல, குடும்பப் பொறுப்புக்களான பயம், அக்கரை, கவலைகளாகிய தடைகள் ஏதுவுமில்லாமல் தேவனுக்குச் சுதந்திரமாக ஊழியஞ்செய்ய ஏதுவாக திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பதை தெரிவு செய்து கொள்பவர்கள் (1 கொரிந்தியர் 7:32-34).*

*இயேசு முடிவுரையாக, "இதை ஏற்றுக்கொள்ள வல்லவன் ஏற்றுக் கொள்ளக்கடவன்" என்றார். "ஏற்றுக்கொள்ளக்கடவன்" எனும் வார்த்தை (chōreō) வசனம் 11 லிருந்து மறுபடியும் சொல்லப்படும் வார்த்தை. அவருடைய இந்த வாக்கியம் அவரது திருமணம் குறித்த போதனையை ஏற்றுக் கொள்வதை ஒருவேளை குறிப்பிடலாம். அது பிரம்மச்சாரியத்தை ஏற்றுக்கொள்வதை ஒரு வேளை குறிப்பிடலாம். இந்த இடத்தில், தம்மைப் பின்பற்றுவோரில் ஒரு சிலர் மட்டுமே பிரம்மச்சாரிய வாழ்வை மேற்கொள்ளக் கூடும் என்று இயேசு அறிந்திருந்தார்.*[26] *முடிவில் இயேசு தமது சீஷர்களுக்கு இரண்டு தெரிவுகளை மாத்திரம் முன்வைத்தார்: தள்ளி விடுதலில்லாத (கணவன் மனைவியிடையே நம்பிக்கைக் துரோகம் இல்லாத பட்சத்தில்) திருமணம் செய்து கொள்ளுதல் அல்லது பிரம்மச்சாரியம்.*

✧✧✧✧✧ ***பாடங்கள்*** ✧✧✧✧✧

## *திருமணத்தைப்பற்றி (19:3-12)*

*அமெரிக்க ஐக்கிய நாடுகளில் விவாகரத்து என்பது தொற்று நோய் போன்றது. இன்று நடக்கிற திருமணங்களில் 40 சதவீதம் நன்கு அறிந்தே*

முடிவுறும்.[27] விவாகரத்து என்பது ரணமானதும் மிகுந்த வலியுமுடையது; அது திருமணத்தின் சாவு. நமது வசனப் பகுதியில் விவாகம், விவாகரத்து, மற்றும் மறுமணம் பற்றிக் குறிப்பிடப்படுவது என்ன?

*குழப்பம் மிகுந்த ஓர் சூழ்நிலை - எதிர்க்கும் இரண்டு கோணங்கள் (19:3).* இயேசுவின் நாட்களில் எதிர்க்கும் இரண்டு கோணங்கள் பரவலாகக் காணப்பட்டன. ஷமாய் ("பூர்வகாலத்து முறையில் மாற்றம் விரும்பாதோர்") உபாகமம் 24:1-4ல் சொல்லப்படும் "இச்சையான காரியம்" விபச்சாரமாக மட்டுமே இருக்க முடியும் எனும் கருத்தைக் கொண்டவர்கள். ஹிலல் ("சுயாதீன கொள்கையுடையோர்") இலச்சையான காரியம் என்பது கணவனை வெறுப்படையச் செய்கிற எந்த செயலும் தள்ளுதற் சீட்டைக் கொடுப்பதற்கு ஏதுவானது என்று சொன்னார்கள்.

இவைகளே இயேசுவிடம் கேள்விகேட்ட பரிசேயர்களின் முரண்பட்ட கருத்துக்கள். உண்மையில் சத்தியத்தை தெளிவாக கண்டறிவது அவர்களின் நோக்கமல்ல; அவர்கள் இயேசுவை சிக்கவைக்க வகை தேடினர். அவர் இரண்டு கருத்துகளில் எந்தபக்கமும் சாயாமல் விவாதத்தின் போது கூடியிருந்தவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தினார்.

*இரட்சகரால் ஒரு திருத்தம் - "சிருஷ்டிகரிடம் திரும்புதல்" (19:4-6).* தள்ளிவிடுதலை இயேசு எளிமையாக்கவோ சுயாதீனமுடையதாக்காவோ முயற்சிக்கவில்லை. தள்ளிவிடுதலை அவர் பிரிந்துரைக்கவோ, பாராட்டவோ செய்யவில்லை. இந்த கருத்துக்களின் போதனைக்காக எந்த பிரசித்தி பெற்ற நிலையையும் முன்வைக்கவில்லை, இந்த நோக்கத்துக்காக அவர் மோசே சொன்ன கருத்துக்களையும் முன்வைக்கவில்லை, அவர் தேவனுடைய மூலாதார துவக்க நிலைக்கே ஆதியாகமத்தில் கூறப்பட்ட கருத்துக்குப் போனார்.

தேவனுடைய திட்டத்தின்படி ஒருவனுக்கு ஒருத்தி என்பதே வாழ்நாள் நியமமாக உட்படுத்தப்பட்டது (ஆதியாகமம் 2:21-25). இதினால் பலதார மறுமணம், ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்டவருடன் வாழுதல், ஓரின பாலியல் சேர்கை ஆகியவை தவிர்க்கப்படுகிறது (ரோமர் 1:26, 27). தேவனுடைய ஏற்பாட்டிலிருந்து ஜனங்கள் விலகிப் போகும்போது, பாவமும் சந்தோஷக் குறைவுமே பின் தொடரும்.

*குழப்பமிகுந்த ஒரு காட்சி - "மோசே தள்ளிவிடுதலை அனுமதித்தார்" (19:7-9).* யூதர்கள் தங்கள் விவாதத்தில் மோசேயை தேவனுக்கு விரோதமாக நிறுத்த முயற்சித்தனர். அவர்களுடைய வாதிடுதலின் நோக்கம் திருமணத்தின் பரிசுத்தத்தை பாதுகாப்பது அல்ல மாறாக விவாகத்தை முடிவுக்குக் கொண்டுவர மோசேயின் கட்டளையைப் பயன்படுத்த முற்பட்டனர்.

"அப்படியானால் தள்ளுதற்சீட்டைக் கொடுத்து, அவளைத் தள்ளிவிடலாமென்று மோசே ஏன் கட்டளையிட்டார்" என்று கேட்டார்கள். இன்னமும் இது ஒரு நல்ல கேள்விதான். இயேசுவின் பதிலில், "உங்கள் இருதயக் கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார்" என்றார். உண்மையில் மோசே தள்ளிவிடுதலுக்குக் கட்டளையிட வில்லை; ஏற்கனவே இருந்த ஒரு முறையை அவர் ஒழுங்குபடுத்தி திருமண பந்தத்தை பாதுகாத்தார்.

அவரிடத்தில் கேட்கப்பட்ட கேள்வி, "புருஷனானவன் எந்த முகாந்தரத்தினாலாகிலும் மனைவியைத் தள்ளிவிடுவது நியாயமா?"

அவர் பதிலளித்து சட்டரீதியாக இதற்கு ஒரே ஒரு காரணம் மட்டுமே உண்டு, அது ஒருவர் மற்றவருக்கு எதிராக "வேசித்தனம்" (பாலுறவு சம்பந்தப்பட்ட நம்பிக்கைத் துரோகம்) செய்தல். இயேசு தாமே மறுமணம் செய்தலைக்குறித்த பாடத்தைக் கொண்டு வந்தார். ஒருவரது துணை வேசித்தன முகாந்தரத்தினிமித்தம் தள்ளிவைக்கப்பட்டால் மறுமணம் அனுமதிக்கப்பட்டது.

*இக்கட்டான சூழ்நிலை - "விவாகம் பண்ணாமலிருப்பது நலம்"* (19:10-12). சீஷர்கள் இந்த பாடத்தின் கருத்துக்கள் குறித்து கர்த்தர் போதித்தவைகளை கடினமானதாகக் கருதினர். அநேகர் இன்று இந்தக் கண்ணோட்டத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளனர். முடிவுக்குக் கொண்டு வருவது மிகவும் கஷ்டம் என்றிருக்கும் ஒரு திருமண பந்தத்தில் நுழைவதைக் காட்டிலும் திருமணமே செய்யாமலிருந்துகொள்வது நல்லது என்பதை சீஷர்கள் காணமுடிந்தது.

தம்முடைய போதனையை அவர்கள் புரிந்துகொண்டிருந்த விதத்தை இயேசு ஒப்புக் கொண்டார். அவை கடினமான உபதேசம் என்றும் எல்லாருமே இதை ஏற்று அதன்படி வாழ இயலாது என்றும் அவர் அறிக்கையிட்டார். எனவே விவாகம் செய்து திருமணபந்தத்தின் பரிசுத்தத்தை மீறுவதைப் பார்க்கிலும் ஒருவர் "அண்ணகராக" (பிரம்மச்சாரியத்தைக் கைக் கொண்டவராக) பரலோக ராஜ்யத்தினிமித்தம் நிலைத்திருப்பது மிக நன்று.

## விவாகரத்து: ஒரு தொற்றுவியாதி (19:3-12)

திருமணம் தோல்வியடைவது ஏன்? பரிசீலனைக்கென்று இங்கே நான்கு காரணங்கள் கொடுக்கப்படுகின்றன.

*1. திருமணம் என்பது தேவனால் அருளப்படுவது என்ற கோணத்தில் பார்க்காமல், முற்றிலும் மனித ஏற்பாடுகளினால் நடப்பது என்ற கோணத்தில் பார்ப்பது.* தேவன்தான் திருமணத்தை திட்டமிட்டு (முதலில்) அமைத்தார் என்று நமது சமுதாயம் அறிந்துகொள்ள வேண்டும். தேவனுடைய கட்டளையினால் வீடும் குடும்பமும் உருவாயிற்று (ஆதியாகமம் 1:27, 28; 2:18-24). முதல் தம்பதியை தேவன் இணைத்தார் என்றும் அது ஒரு வாழ்நாள் (வரை) ஒப்புக் கொடுத்தல் ஆதலால் அவர் மட்டுமே அந்த ஐக்கியத்தை குலைக்கக் கூடிய காரணத்தை கொடுக்கக் கூடும் என்று இயேசு சொன்னார்.

திருணத்தின் மேல் தேவனுக்கு அதிகாரமில்லை என்று சிலர் நினைக்கலாம். திருமண அங்கீகாரம் இல்லாமலேயே அநேக தம்பதிகள் அதன்பயனை அறியாமல் ஒன்றாக சேர்ந்து வாழ்கின்றனர். மற்றவர்கள் அந்தந்த நாட்டின் சட்டங்களோடு ஒத்துப் போய் மணம் புரிகின்றனர் ஆனாலும் அதைக் காட்டிலும் மேலான அதிகாரத்தை அவர்கள் ஏற்பதில்லை. தேவனுடைய பிரமாணமே (சட்டங்களே) அதிகாரம் மிக்கவை, அவை மனித மேம்பாட்டுக்காக கொடுக்கப்பட்டவை.

*2. திருமணம் என்பதை வாழ்நாள் முழுவதும் ஒப்புக் கொடுக்கப்பட்ட கட்டளையாகக் காணாமல் இருவரில் ஒருவர் முடிவெடுத்து விட்டுப்பிரியும் வரை ஒப்புக்கொடுத்தலாக காணுகின்றனர்.* திருமணத்தின் போது செய்யும் வாக்குமூலத்தை மிக லேசான காரியமாக பெரும்பாலானவர்கள் எடுத்துக் கொள்கின்றனர். அவிசுவாசிகளிடம் இதை எதிர்பார்க்கலாம், ஆனால் கிறிஸ்தவர்களிடம் அல்ல.

*எனவே, அறியாமை, திருமண தோல்விக்கு செயலூக்கம் கொடுக்கிற விளையாட்டை நடப்பிக்கக்கூடும். திருமணம் குறித்த தேவனுடைய திட்டம் போதிக்கப்படாதவர்கள் உணர்வடையாதவர்களாய் சமுதாயத்தில் காணப்படும் விவாகரத்து, மறுமணம் என்பவை தவறு என்றுகூட அறியாதிருக்கிறார்கள். தேவனுடைய சட்டம் ஜனங்களுக்குப் போதிக்கப்படும் போது அது வெற்றிகொள்ள வேண்டும். மனிதன் தன்னில் அனுமதிக்கும் அனைத்துக் காரியங்களையும் தேவன் ஏற்றுக் கொள்வதில்லை. தேசத்தின் சட்டங்களுக்கு (ரோமர் 13:1, 2) நாம் கீழ்ப்படிய தேவனுடைய பிரமாணத்துக்கு முரண்பாடாக அமைந்துவிடக் கூடாது.*

*3. திருமணத்துக்கென்று ஆவிக்குரிய ஒப்பந்தம் எதுவுமில்லை. "கலப்புத்" திருமணங்கள் இஸ்ரவேலருக்கு வாதையாக அமைந்தது (எஸ்றா 9; 10; நெகேமியா 13:23-27). இன ரீதியில் கலப்புத்திருமணம் பிரச்சனையாயிருக்கவில்லை, மார்க்க (பக்தி) ரீதியில் நடந்த கலப்புத்திருமணம் தான் பிரச்சனையாயிற்று. ஒரு கிறிஸ்தவன் தனது சொந்த விசுவாசத்துக்குப் புறம்பே மணம் முடிக்கும்போது ஆயத்தப்படுத்தப்பட்ட பேராபத்து தயாராயிருக்கிறது. வெற்றி வரலாறுகள் நிச்சயமாக சிறுபான்மையினரிடமே உண்டு.*

*விசுவாசமுள்ள ஒரு கிறிஸ்தவராக ஒருவரை மனமாற்ற முடியும் என்று நம்புகிறவர்கள் திருமணத்துக்கு முன்பே அப்படிச் செய்ய வேண்டும். அப்பொழுது அவனோ அவளோ திருமணத்துக்குள் நுழையும் முன் போதியஅளவு காத்திருந்து அவர்களின் மனமாற்றம் உண்மையானது தான் என்று உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.*

*4. திருமணம் உண்மையான அன்பை உட்படுத்துவதில்லை. எல்லா திருமணங்களும் தெய்வீக அன்பை அடிப்படையாகக் கொண்டிருப்பதில்லை. சில திருமணங்கள் வெறும் சரீரக் கவர்ச்சியை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. மற்றவைகள் பொருளாதார பாதுகாப்பு அல்லது சமுதாயச் சுழல் போன்ற அடிப்படைகளில் அமைகின்றன. ஜனங்கள் வேண்டா வெறுப்புடன் கூட மணம் முடிப்பதுண்டு, ஆனால் முடிவில் அவர்கள் தங்களையே பாதிப்புக்குள்ளாக்கிக் கொள்வர்.*

*தம்பதிகள் உண்மையான அன்பை ஒருவருக்கொருவர் காட்டும்போது, எந்த வித பிரச்சனையையும் தீர்த்துக் கொள்ளக் கூடும். தவறுகள் மன்னிக்கப்படலாம், சுயநலம் புறந்தள்ளப்படலாம் (எபேசியர் 5:22, 23, 28, 29).*

*ஆயத்தப்படுத்துவதிலுள்ள குறையே பொதுவாய்க் காணும் ஒரு பிரச்சனை. சிலதம்பதிகள், குறிப்பாக இளந்தம்பதிகள், வினயமான சிந்தனையின்றி அவசரமாக திருமணத்துக்குள் நுழைந்து ஆயத்தமின்றி மணமுடிப்பர். சில உறவுகள் ஏன் முறிந்து போகின்றன என்னும் உணர்வே வழியிலே மறைந்திருக்கும் குழிகளை தவிர்த்து, நிலைத்தலும் சந்தோஷம் மிகுந்ததுமான திருமணத்தின் வாழ்வைப் பெற உதவிகரமாயிருக்கும்.*

## ஒரு நேர்மையான செயல் திறன் கொண்ட அணுகுமுறை *(19:3-12)*

பெரும்பாலும், நாம் தவறான இடத்தில் ஆரம்பித்து ஒரு பிரச்சனையை சரிபண்ண முற்படுகிறோம். நம்முடைய பிரயாசங்களெல்லாம் லாயத்திலிருந்து ஓடிப்போன குதிரையைப் பிடிக்க முயற்சிப்பது போன்றது. குதிரை வெளியே ஓடுவதற்கு முன் கதவை அடைப்பது அதிக புத்திசாலித்தனமல்லவா? அதேபோல, (பிரச்சனை வந்த பின்பு) விவாகரத்து பிரச்சனைகளை சந்திக்கிற தம்பதிகளுக்கு ஆலோசனைகளை வழங்குவதைக் காட்டிலும் குடும்ப உறவு முறையை பலப்படுத்திக் கொள்வது, புத்திசாலித்தனமல்லவா? ஒவ்வொரு பிராந்திய சபையிலுமுள்ள மூப்பர்கள் ஒரு பலமான திருமணங்களையும் குடும்பங்களையும் எப்படி கட்டி எழுப்ப வேண்டும் என்பதற்கு ஏதுவான கல்வியை ஜனங்களுக்கு கொடுப்பது குறித்த ஞானமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். கிறிஸ்தவத் தம்பதிகளுக்கு தகுதி உயர்வு கருத்தரங்குகளையும் வகுப்புகளையும் அவ்வப்போது நடத்த வேண்டும். ஆசிரியர்கள் (போதகர்கள்) தங்களிடம் உள்ள வாலிபர்களுக்கு திருமணத்தின் புனிதம், கணவனின் கடமை மற்றும் மனைவியின் கடமைகளை போதிக்க வேண்டும். அவர்கள் பக்தியுடன் கூடிய வகையில் தங்களது துணைகளைத் தேடச் செய்ய வேண்டும். ஊழியக்காரர்கள் திருமணத்தை நடத்த பொறுப்பேற்றபின்பு திருமணத் தம்பதிக்கு தேவையான அறிவுரை ஆலோசனைகளை திருமணத்துக்கு முன்பே கொடுக்க வேண்டும். திருமணம் சார்ந்த தலைப்புகளில் அவ்வப்பொழுது குடும்பத்தைக் குறித்து பிரசங்கிக்க வேண்டும்.

---

குறிப்புகள்

[1]மத்தேயுவைக் காட்டிலும் லூக்காவில் இந்தக் காலக்கட்டத்தின் அதிகமான நிகழ்ச்சிகள் கொடுக்கப்பட்டுள்ளது (லூக்கா 13:22-18:34 காணவும்). சமாரியாவிலும் கலிலேயாவிலும் அநேக சம்பவங்கள் பெரோயாவில் நடந்தவைகளைக் காட்டிலும் ஒப்புயர்வற்றவையாக லூக்கா எழுதினார் (லூக்கா 13:22; 17:11). [2]Josephus *Antiquities* 17.8.1; *Wars* 3.3.3. [3]Mishnah *Yebamoth* 14.1. [4]Mishnah *Arakhin* 5.6; *Nedarim* 11.12. [5]Josephus *Antiquities* 15.7.10. [6]Ibid., 18.5.4. [7]Ibid., 4.8.23. ஜோசிபஸ் "தனது மூன்றாவது மனைவியின் நடத்தையில் பிரியமற்றவராய்" அவளை விவாகரத்து செய்திருந்தார் (Josephus *Life* 76). [8]Mishnah *Gittin* 9.10. பின்னதாக, ரபீ அகிபா சொன்னதாவது, "அவளைக் காட்டிலும் மிக அழகான ஒருத்தியை அவன் பார்த்திருந்தாலும்." இந்த நிலைமையை வரும் சொற்றொடரை அடிப்படையாகக் கொண்டு எழுதினார் "அவனுடைய பார்வையில் அவள் தயைபெற்றிருக்க மாட்டாள்" (உபாகமம் 24:1). [9]Leon Morris, *The Gospel according to Matthew,* Pillar Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1992), 480–81. [10]கும்ரானில், ஆதியாகமம் 1:27 பலதார மணம் புரிதலை எதிர்த்து மேற்கொள் காட்டப்பட்டது. (*Damascus Rule* 4.20-5.2.) எப்படியிருப்பினும் யூதமார்க்கத்தின் முதன்மைச் சட்டங்கள் பலதாரங்களை அனுமதித்தது. சாதாரண மனிதர்கள் நான்கு அல்லது ஐந்து பேரையும் ராஜாக்கள் பதினெட்டு பேர்கள் வரையும் மனைவியாக்கிக் கொள்ளலாம். (Mishnah *Sanhedrin* 2.4; *Ketuboth* 10.1–6; *Kerithoth* 3.7.)

[11]John Chrysostom *Homilies on Matthew* 62.1. [12]R. T. France, *The Gospel According to Matthew,* The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 280. [13]*மைக்கேல் J. வில்கின்ஸ் உபாகமம் 24:1-4ல் சொல்லப்படும் மோசேயின் சட்டங்கள் குறித்து மூன்று நோக்கங்களைக் குறிப்பிட்டார்: (1) அநாகரீகம் என்று கருதப்பட்டதிலிருந்து (இலச்சையிலிருந்து) திருமணத்தின் புனிதத் தன்மையைக் காக்க. (2) சுய எண்ணக்கோளாறினால் தள்ளுதற் சீட்டுக் கொடுக்கப்பட்ட ஸ்திரீயை பாதுகாக்க, மற்றும் (3) அவளுடைய நிலையில் அவள் முறைப்படி விவாகரத்து பெற்றவள் என்று காட்டுவது, அதினால் அவளை ஒரு விபச்சார ஸ்திரீயாகவோ விபச்சாரத்தினால் ஓடிப்போனவளாகவோ யாரும் எண்ணிவிடாதபடிக்கும்.* (Michael J. Wilkins, "Matthew," in *Zondervan Illustrated Bible Backgrounds Commentary,* vol. 1, *Matthew, Mark, Luke,* ed. Clinton E. Arnold [Grand Rapids, Mich.: Zondervan, 2002], 118.) [14]*"விதி விலக்குப் பிரிவு" சுவிசேஷ ஒற்றுமைப் பகுப்பில் எங்கும் இதற்கு ஒப்பான வார்த்தை பயன்படுத்தப்படவில்லை (மாற்கு 10:11; லூக்கா 16:18).* [15]*தொடர்புடைய வினைச்சொல்* (*moichaō*), *"விபச்சாரஞ் செய்தல்" என வசனம் 9ல் காணப்படுகிறது. போர்னியா எனும் பதம் குறித்து மேலும் விவரங்களுக்கும் விளக்கத்துக்கும், காண்க* Jack P. Lewis, "An Exegesis of Matthew 19:1-12," *Harding Graduate School of Religion Bulletin* 18 (September 1987): 2. [16]Mishnah *Ketuboth* 3.5; *Sotah* 5.1; *Yebamoth* 2.8. [17]*தள்ளுபடியாகமத்தின் புத்தகமான ஸ்ராக் ஆகமம், "நீ சொல்லுகிறபடி அவள் செய்யாவிட்டால், உன்னிடத்திலிருந்து அவளை விலக்கி வை" என்று சொல்கிறது* (Sirach 25:26 [NRSV]). *தால்முத் சொல்லுகிறது, "*[*ஒருவனுக்கு*] *ஒரு கெட்ட மனைவியிருந்தால் அவளை தள்ளி விடுவது புகழப்படத்தக்க செயல்"* (Talmud *Yebamoth* 63b)*; "நீ அவளை வெறுத்தால், அவளை நீ தள்ளிவிட வேண்டும்"* (Talmud *Gittin* 90b). *விழுந்து போன ஒரு மனைவியை எப்படி தள்ளி வைக்க வேண்டும் என்பதற்கு ஊக்கமளிக்கும் பொருட்டு சில ரபீமார்கள் ஒரு பழங்கால கதை சொல்வதுண்டு. புருஷன் தான் பெற்ற வரதட்சணையை திரும்பச் செலுத்த இயலவில்லை, எனவே ரபீமார்கள் பணத்தை கொடுத்து தள்ளுதற் சீட்டைக் கொடுக்கச் செய்தனர்.* (*Genesis Rabbah* 17.3; *Leviticus Rabbah* 34.14.) [18]Mishnah *Zabim* 2.1; *Yebamoth* 8.4–6; Jerusalem Talmud *Yebamoth* 8.4–6. [19]Ibid. [20]Josephus *Antiquities* 4.8.40; *Against Apion* 2.38.

[21]*The Middle Assyrian Laws* A15, 18, 19. [22]Will Roscoe, "Priests of the Goddess: Gender Transgression in Ancient Religion," *History of Religions* 35 (1996): 195–230. [23]Xenophon *Cyropaedia* 7.5.60–65. [24]*இந்தப்பதம் saris, "அண்ணகர்" என மொழிபெயர்க்கப்பட்டது* (KJV), *பெரும்பாலும் "அலுவலக ரீதியானது"* (NASB) *என்று மொழிபெயர்க்கப்பட்டது.* [25]*முரண்பாடாக, ஓரிஜன் (கி.பி. 185-254) விளக்கத்தை நேரடிப் பொருளில் எடுத்துக் கொண்டு தன்னையே இனப்பெருக்காற்றலை அழித்துக் கொண்டான்.* (Eusebius *Ecclesiastical History* 6.8.) [26]*உண்மையில், அநேக யூதர்கள் திருமணம் என்பது தேவனிடத்திலிருந்து கொடுக்கப்பட்ட கட்டளை என்பதாக நினைத்தனர் (ஆதியாகமம் 1:28ஐக் காண்க).* (Mishnah *Yebamoth* 6.6.) *பிரம்மச்சாரியத்தைக் கைக் கொள்ளும் எவரும் எஸ்ஸன்ஸ் எனும் பிரிவை பிரதானமாகச் சார்ந்திருப்பார்கள்.* (Josephus *Antiquities* 18.1.5; *Wars* 2.8.13; Pliny *Natural History* 5.15.) [27]Glenn T. Stanton, "Divorce," http://www.focusonthefamily.com/lifechallenges/relationship_challenges/divorce.aspx; accessed 7 June 2010.